ஹர ஹர ஶங்கர ஓம் ஜய ஜய ஶங்கர








ஶ்ரீ-வேதவ்யாஸாய நமஃ

# ஶ்ரீமத்-ஆத்ய-ஶங்கர-பகவத்பாத-பரம்பராகத-மூலாம்நாய-ஸர்வஜ்ஞ-பீடம்
# ஶ்ரீ-காஞ்சீ-காமகோடி-பீடம்
# ஜகத்குரு-ஶ்ரீ-ஶங்கராசார்ய-ஸ்வாமி-ஶ்ரீமடம்-ஸம்ஸ்தாநம்

## ॥அக்ஷய-த்ருதீயா॥

**வைஶாக-ஶுக்ல-த்ருதீயா**

நமது ஸநாதன தர்மத்தில் பாபங்களை போக்கிக்கொள்வதன் மூலமாக கஷ்டங்களிலிருந்து விடுபடுவதற்கும், ஸுகங்களை அடைவதற்கும் பல உபாயங்கள் வேத/புராண/இதிஹாஸங்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் தானம் மிகவும் சக்தி வாய்ந்த உபாயம் என்று பகவான் கருட புராணத்தில் “தாநேந ஸுலபோ தர்மஃ” என்று கூறுகிறார்.

அந்த தானமும் சில இடங்களில்/ஸமயங்களில் செய்யும் பொழுது மிக அதிக பலனைக் கொடுக்கக் கூடியது. அவ்வாறான ஒரு ஸமயம் தான் இந்த “அக்ஷய த்ருதீயை”. சித்திரை மாதத்தின் அமாவாஸ்யைக்குப் பிறகு வரக்கூடிய (சாந்த்ரமானப்படி, வைஶாக மாஸத்தின்) ஶுக்ல த்ருதீயையே அக்ஷய த்ருதீயை எனப்படும்.

அன்று செய்த தானத்தின் பலனானது என்றும் குறையாமல் இருப்பதால் இந்த பெயர் ஏற்பட்டுள்ளது என்று பவிஷ்ய புராணம் கூறுகிறது—

**யா த்வேஷா குருஶார்ஂஉல வைஶாவே மாஸி வை திழி:|**
**தூதீயா ஸாऽக்ஷயா லோகே ழீர்வாணைரஹிநந்ஊிதா॥29||**

**யத் கிம்சிஂ ஊீயதே ஊாநம் ஸ்வல்பம் வா யஊி வா ஸஹு|**
**தத் ஸர்வமக்ஷயம் ஸ்யாஂ வை தேநேயமக்ஷயா ஸ்மூதா॥31||**
**—ஹவிஷ்யமஹாபுராணே ப்ரழமே ஸ்ரஹ்மபர்வணி ஏகவிம்ஶே அ௰யாயே**

அக்ஷய த்ருதீயை தினத்தில் உபவாஸமிருந்து தானாதிகளைச் செய்தால் மேலும் அதிகமான பலன் உண்டாகும் என்றும் ஆசைப்படக்கூடிய அனைத்தும் கிடைக்குமென்றும் பகவான் பரமேஸ்வரன் பார்வதிக்கு உபதேசித்ததை மத்ஸ்ய புராணம் கூறுகிறது.

**அழாந்யாமபி வக்ஷ்யாமி தூதீயாம் ஸர்வகாமஊாம்|**
**யஸ்யாம் ஊத்தம் ஹுதம் ஜப்தம் ஸர்வம் ஹவதி சாக்ஷயம்||1||**

**வைஶாவே ஶுக்லபக்ஷே து தூதீயா யைருபோஷிதா|**
**அக்ஷயம் ஃலமாப்நோதி ஸர்வஸ்ய ஸுக்ருதஸ்ய ச||2||**
**—மத்ஸ்யமஹாபுராணே பஞ்சஷஷ்டே அ௰யாயே**

**ஸஹஸ்ர஗ுணிதம் ஊாநம் ஹவேஂ ஊத்தம் யு஗ாஊிஷு|**
**வைஶாவே ஶுக்லபக்ஷே து தூதீயாயாம் ச ஹாமிநி||**

**ஸ்நாத்வா து தர்பயேஂ ஹக்த்யா திலஊர்ஹஜலைঃ ப்ரியே|**
**ஶ்ராஂ௰ம் க்ருதம் ஹவேத் தேந ஗ங்஗ாயாம் நாத்ர ஸம்ஶய:||**
**—ஸ்காந்ஃே மஹாபுராணே ஸப்தமே ப்ரஹாஸவண்ஃே**

பொதுவாக யுகாதிகளில் தானம் செய்தால் ஆயிரம் மடங்கு பலன் கிடைக்கின்றது. அக்ஷய த்ருதீயை என்பது க்ருதயுகத்தின் தொடக்கம். அன்று தானம் செய்வதால் அனந்த பலனும் அன்று பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்வதால் கங்கையில் ஶ்ராத்தம் செய்த பலனும் கிடைப்பதாக ஸ்காந்த புராணமும் பாத்ம புராணமும் கூறுகின்றன.

# க்ரந்தமிழ் – அதிக எழுத்துக்கள்

| देवनागरी | 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌃 | IAST (Latin) | देवनागरी | 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌃 | IAST (Latin) |
|---|---|---|---|---|---|
| ऋ / ◌ृ | 𑌋 / ◌𑍃 | ṛ | ठ | 𑌠 | ṭha |
| ॠ / ◌ॄ | 𑍠 / ◌𑍄 | ṝ | ड | 𑌡 | ḍa |
| ऌ / ◌ॢ | 𑌌 / ◌𑍢 | ḷ | ढ | 𑌢 | ḍha |
| ॡ / ◌ॣ | 𑍡 / ◌𑍣 | ḹ | थ | 𑌥 | tha |
| ◌ं | ◌𑌂 | ṃ | द | 𑌦 | da |
| ◌ः | ◌𑌃 | ḥ | ध | 𑌧 | dha |
| ख | 𑌖 | kha | फ | 𑌫 | pha |
| ग | 𑌗 | ga | ब | 𑌬 | ba |
| घ | 𑌘 | gha | भ | 𑌭 | bha |
| छ | 𑌛 | cha | श | 𑌶 | śa |
| झ | 𑌝 | jha | श्र | 𑌶𑍍𑌰 | śra |